IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF SULUR

(DEPOSITION OF WITNESS : நீ.ம.சா.1) Solemnly affirmed and sworn by Tmt.R.Lakshmi, Junior Assistant on 26.06.2024 is accordance with the provision of Act X of 3331

அசல் வழக்கு எண். 168-2019 மற்றும் 72-2020

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோபாலகிருஷ்ணன் | தாலூக்கா | சூலூர் |
| தந்தை/கணவர் பெயர் | ஈஸ்வரன் | கிராமம் | சூலூர் |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

நீ.ம.சா.1 ஆக 26.06.2024 அன்று ஆஜராகி

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இவ்வழக்கில் நான் நீதிமன்ற ஆணையராக வழக்கு சொத்தை பார்வையிட்டு கடந்த 23.06.2023 ல் எனது அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேன், அந்த ஆவணம் நீ.ம.சா.ஆ.1 முதல் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>வாதி தரப்பு விசாரணை</u>

என்னுடைய வரைபடத்தில் 1 வது அயிட்ட சொத்திற்கு அருகில் பேருந்து நிறுத்தம் உள்ளதாக குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. ஆனால் நிலையில் 1 வது அயிட்ட சொத்திற்கு அருகில் ஒரு பேருந்து நிறுத்தம் உள்ளது. புல எண்.155/2D புல எண்ணிற்கு மேல்புறமாக நடராஜன் என்பவரது வீடு உள்ளதாக நான் குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் ஒரு நபர் வீடு உள்ளது அது நடராஜன் என்பவரா என்று எனக்கு தெரியாது. அந்த வீட்டில் உள்ள நபர் இந்த வழக்கில் ஒரு தரப்பினரா என்றால் இல்லை. மேற்படி நபருக்கு தடம் எது என்றால் E என்று நான் காட்டியுள்ள வழியாக சென்று மெயின் ரோட்டை அடைய முடியும் இந்த கேள்விக்கு பிரதிவாதி அவர் தரப்பினர் இல்லை அவரை இவ்வழக்கில் சேர்க்காமல் அது சம்மந்தமாக கேள்வி எழுப்பக்கூடாது என்று ஆட்சேபணை செய்யப்பட்டது.

வாதிகள் C என்று காட்டப்பட்டுள்ள ரோடு வழியாக மாற்றுப்பாதையான கண்ணம்பாளையம் பஞ்சாயத்து ரோட்டில் சென்றால் மெயின் ரோட்டை அடைய சுமார் 2 கி.மீ சுற்றி வர வேண்டும். நான் மேலே குறிப்பிட்டுள்ள பேருந்து நிறுத்தத்திற்கு அடுத்து சுமார் 2 கி.மீ தள்ளி தான் D-MART அமைந்துள்ள இடத்திற்கு அடுத்து பேருந்து நிறுத்தம் உள்ளது.

கண்ணம்பாளையம் செல்லும் மாற்றுப்பாதையானது நான் சென்று பார்த்த போது குண்டும் குழியுமாகவும் இருந்தது, தற்போது எப்படி உள்ளது என்று எனக்கு தெரியாது, அந்த சாலையில் தெருவிளக்கு இருந்ததா என்று எனக்கு தெரியாது.

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வாதிகளுக்கு தாவா தடம் இல்லாமல் அவர்களது மனைப்பிரிவுகளுக்கு சென்று அவர்கள் இடத்தை அடைவதற்கு தடம் உள்ளது. கண்ணம்பாளையம் பஞ்சாயத்து ரோட்டில் இருபுறமும் நிறைய நிறுவனங்களும், தொழிற்சாலையும் உள்ளது என்றால் ஆமாம். 150/1B புல எண் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் எனக்கு நினைவில்லை. ஆவணங்களின் அடிப்படையில் எனக்கு தெரியாது. நான் பார்வையிட்ட சமயம் தாவா தடத்தில் சிவப்பு நிறத்தில் குறிப்பிட்டுள்ள இடத்தில் கேட் அமைத்து பூட்டப்பட்டிருந்தது. 155/1B ல் ஒரு தடம் இருந்தது அது திறந்த நிலையில் இருந்தது அதன் வழியாகத்தான் வாகனங்கள், ஆட்கள் சென்று கொண்டிருந்தார்கள் என்றால் ஆமாம். பிரதிவாதியின் கல்லூரிக்கு உள்ளே நுழையும் வாயிலில் ஒரு கேட் அமைக்கப்பட்டிருந்தது, அதுவும் பூட்டிய நிலையில் இருந்தது. வழக்கு சொத்திற்கு அருகில் எங்கு பேருந்து நிறுத்தம் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்ல வாதி தரப்பில் குறிப்பாணை எதுவும் வழக்கு சொத்தை பார்வையிடும் முன் எனக்கு தரவில்லை.

அந்த வழக்கு சொத்தில் பேருந்து நிறுத்தமானது கோவிலுக்கு முன்பாக கல்லூரியின் நுழைவாயிலுக்கு அருகில் உள்ளது அது 30 வருடங்களாக உள்ளது என்றால் எனக்கு தெரியாது. கண்ணம்பாளையம் பஞ்சாயத்து ரோட்டிலும் வாதிகள் பயன்படுத்திக் கொள்ளலாம் அதையும் பயன்படுத்தி மெயின் ரோட்டை அடையலாம். கண்ணம்பாளையம் பஞ்சாயத்து ரோட்டின் வழியாக வாதி பூமியில் இருந்து திருச்சி ரோட்டை அடைய சுமார் 2 கி.மீ ஆகும் என நான் தோராயமாக தான் சொன்னேன். அளந்து பார்த்தால் கண்ணம்பாளையம் பஞ்சாயத்து ரோட்டின் வழியாக வாதி பூமியில் இருந்து மெயின் ரோட்டை அடைய ¾ கி.மீ தான் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. வாதி பூமி தடத்தில் இருந்து சுமார் 2-3 அடி பள்ளமாக இருக்கும் என்றால் ஆமாம். பிரதிவாதி பூமிக்கு பின்பு தோட்டம், உள்ளது என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

Sd/கோபாலகிருஷ்ணன்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga

District Munsif
Sulur